திரு. ஜே. ஜேம்ஸ் : சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதி இல்லாத காரணத்தால், அதிக வழக்குகள் முடிவுருமல் இருக்கின்றனவா ? தற்காலிகமாக தலைமை நீதிபதி ஒருவரை நியமிக்காததன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, குழித்துறையைப் பற்றியது.

பாய் நெசவுத் தொழில்

*193 **வினு—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈச்சம்பாய், கோரைப் பாய், நெசவுத் தொழில் தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த இடங்களில் மிகுதியாக நடைபெற்று வருகின்றன?

(இ) இத்தொழில்களை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சிறுகாகுழி தாலுகாவில் கொள்ளிடக்கரை ஓரத்தில் ஏராளமான கோரைகள் மண்டிக் கிடக்கின்றன. அங்கு கோரைப்பாய் நெய்வது முக்கியமான தொழிலாகக் கருதப்படுகிறது. அதை ஊக்குவிக்க அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தஞ்சை மாவட்டத்திலே விளாந்திர சமுத்திரம், விளாங்குடி இரண்டு இடத்திலேதான் இது செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர், அவர் கூறியது பற்றி எழுதி அனுப்பினுல் அரசு கவனிக்கும்.

திரு. கே எ. வகாப் : தலைவர் அவர்களே, விடையிலே சுமார் 32 இடங்களில் பாய் சங்கங்கள் இயங்கி வருவதாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதில் வந்தவாசி கூட்டுறவு என்பது பல சங்கங்களை உள்ளடக்கிய பாய்சங்கம் என்பதை அரசு அறியுமா ? அது

@ 382–384-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

மற்ற சங்கங்களைவிடப் பெரிய சங்கம் என்பதால், மற்ற சங்கங்களுக்கு அளிப்பதுபோல் இல்லாமல் அதற்கு அதிகப்படியான உதவிகளை அரசு அளிக்குமா ? நஷ்டத்தில் நடக்கின்ற சங்கங்களுக்குத்தான் உதவி அளிப்பது என்ற கொள்கை இருக்கிறதே, அதை மாற்றி லாபத்தில் நடக்கின்ற சங்கங்களுக்கும் உதவிகளை அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இதை நன்றாக நடத்துகிறார்கள் என்று அரசாங்கம் பெருமையோடு கருதிக்கொண்டிருக்கிறது. ஆகவே, உதவிகளைக் கேட்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is there any reduction in the production of the mat weaving industry in recent years due to competition from other industries like plastics industry?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிய விவரம் இல்லை.

Industrial Liaison Board

* 194 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have any proposal to form an Industrial Liaison Board ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ). இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Sir, was any proposal brought before the Government to find out the needs of each industry and then to train technical persons to suit the needs of each industry so that proper technical persons can be given to the various industries. Also, whether such a proposal was not recommended by the Technical Education Department?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்குத் தேவையானவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வேலை வாய்ப்பைத் தர வேண்டுமென்ற முயற்சியை மேற்கொள்ளும் வகையில் மாநில அளவிலே தொழில் அதிபர்களையும் இந்தத்